விவசாய படை

# விண்ணப்பிக்காதவர்களும் எம். பி. மாரின் சிபார்சில் சேரலாம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 1 0
போன் 389 | National Tamil Daily | இதழ் 33 | தேசிய தினசரி

பா [illegible] [illegible] பங்குனி 1 ஜுல்ஹஜ் 14 வியாழக்கிழமை (14-3-68)

யாழ்ப்பாணம், வியாழன் நேற்றும், நேற்றுமுன்தினமும் வடமாகாணத்திலுள்ள இளைஞர்களில் விவசாயப் படை நியமனத்துக்கு வவுனியாவுக்கும், கிளிநொச்சிக்கும் அழைக்கப்பட்டிருந்தவர்களில் 50 வீதமும்கூட சமுகமளிக்கவில்லை.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடந்த விவசாயப் படை நியமனத்துக்கு அழைக்கப்பட்ட 200க்கு மேற்பட்டவர்களில் 67 பேர் மட்டும் வந்திருந்தனராம். நேற்றுக் கிளிநொச்சிக்கு அழைக்கப்பட்டிருந்த 270 பேர்களில் 100 பேர் மட்டும் நியமனம் பெறுவதற்காக வந்திருந்தார்களாம். காரியாதிகாரி கந்தோரில் இந்த நியமனம் வழங்கப்பட்டது. விவசாயப்படை கமிஷனர், காரியாதிகாரி கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் அப்போது சமுகமளித்திருந்தனர்.

விவசாயப்படை முகாம் அமைப்பதற்கு பாதியளவு, எதிர்பார்த்த தொகையினர் நியமனத்தை ஏற்றுக்கொள்ள

[8ம்பக்கம் பார்க்க]

# “கல்வி, சுகாதாரம் இல்லாத மாவட்ட சபை பயனற்றது”

## திரு. ஜி. ஜி. கருத்து

யாழ்ப்பாணம் வியா. மாவட்டசபையின் கீழ் இரு முக்கிய விஷயங்களாக கல்வி, சுகாதாரம் ஆகியவை இருக்கவேண்டும். இவ் விஷயங்கள் இல்லாத மாவட்ட சபையினால் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி எந்தச்சமுகத்தவருக்கும் நன்மை ஏற்படப் போவதில்லை.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நேற்றுக்காலை நடந்த ஆசிரியர் சங்கங்களின் கருத்தரங்கில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ் வேலுப்பிள்ளை தலைமையில் இன்றைய கல்வி நிலையும் ஆசிரியர்களை எதிர்நோக்கும் பிரச்னைகளும் என்னும் பொருள்பற்றிப் பேசிய திரு பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

மாவட்டசபை பற்றிய எனது கருத்தைத் தற்போழுது வெளியிடமுடியாத நிலையிலிருக்கிறேன்.

மாவட்ட சபை மசோதா வெளிவந்ததும் எனது கருத்தை பகிரங்கமாக வெளியிடுவேன். மாவட்டசபை பெயரளவில்தான் இருக்கும். நடக்கவேண்டிய விஷயங்கள் இருக்காது. இதுபற்றி விளக்கமாக கூற முடியாத நிலையிலிருக்கிறேன் நகல்மசோதா வெளிவரு மட்டும், என் கருத்தை தெரிவிப்பதில்லையென பிரதமருக்கு வாக்குறுதியளித்திருக்கிறேன்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் இரு விஷயங்களான கல்வி, சுகாதாரம் ஆகியவற்றை மத்தியஅரசாங்கம் உள்ளூராட்சிமன்றங்களின் பொறுப்பில் விட்டுள்ளது. வேறுசில விஷயங்களையும் மத்தியஅரசாங்கம் பிரித்து உள்ளூராட்சியிடம் ஒப்படைத்துள்ளது. இதனால் கல்வியிலும் சுகாதாரத்திலும் பல முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன.

இலங்கையில் 33-ம் ஆண்டு இருந்த கல்வி நிலைமையையும், இன்றுள்ள கல்வி நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வித்தியாசம் தெரியும். அன்றிருந்த கல்வி அறிவு பரம்பரை அனுபவம் இன்றில்லை.

ரஷ்யா, செக்கோஸ்லோவாக்கியா, ரூமேனியா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளில், கல்வி விஷயங்கள், உள்ளூராட்சியிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் முழுக்க முழுக்க கல்வி விஷயம் உள்ளூராட்சி நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகிறது.

### கல்வியில் மாற்றம்

நமது பிள்ளைகளுக்கு என்ன பாடம் போதிக்கவேண்டும், எவ்வகையான புத்தகங்கள் பாடப்புத்தகங்களாக இருக்கவேண்டுமென்பதை உள்ளூராட்சி நிர்வாகமே தீர்மானிக்கவேண்டும். மாவட்ட சபை வந்தால் இவையெல்லாம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் எதிர்கால சந்ததியினர் பயனடைவர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## விருப்பப்படி வாக்களிக்க அனுமதி கிடைக்காது

கொழும்பு, புதன் மாவட்டசபைகள் அமைப்பதற்கான நகல் மசோதா இம்மாதம் 23-ந்திகதி பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படவிருக்கிறது. என்றாலும் அக் கூட்டத்தில் மசோதாவில் பெரும் மாறுதல் எதுவும் செய்யப்பட மாட்டாதென எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 25ந்- திகதி மசோதா பார்லிமென்டில் சமர்ப்பிக்கப்படும். என்றாலும் பொதுமக்களின் கருத்தை அறிந்து அதற்கான திருத்தங்களைச் செய்வதற்காக மசோதா பார்லிமென்டின் நிரந்தரக் குழுவிடம் விடப்படும்.

ஆனால் மாவட்டசபை மசோதா மீது ஆளும் கட்சியினர் தமது விருப்பப்படி வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்களென்பது நிச்சயமாம்.

## வெளிநாட்டுப் பிரயாணம்: டிக்கட்டுகள்மீதும் வரி?

கொழும்பு, புதன் 1966-67-ல் இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்வதற்காக 50 லட்சம் முற்பணம் கட்டிய டிக்கட்டுகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இது பற்றி இன்று மந்திரிசபை உபகமிட்டு ஆராய்ந்தது.

இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு இவ்வாறு போவதைக் கட்டுப்படுத்தவும் கள்ளத்தனமாகப் பணம் வெளிநாடுகளுக்குப்

[8-ம் பக்கம் பார்க்க]

# ‘40 புதிய பஸ்கள் உடனே தேவை’

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண மாவட்டத்தில் போக்குவரத்து சேவையைச் சீராக்க 40 புதிய பஸ்களை உடனடியாகத் தருமாறு அரசாங்க அதிபர் தலைமையில் ஒரு குழு இ. போ. ச. தலைவர் திரு. ஆர். ரி. டி. சிவாவைச்சந்தித்துக்கோரவிருக்கின்றது

இத்தீர்மானம் நேற்றுமுன்தினம் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள போக்குவரத்துச்சீர்கேடுகளை ஆராயவென மாவட்ட இணைப்புக் குழுவினால் நியமிக்கப்பட்ட இச்செயற்குழுவின் கூட்டம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது

வடபகுதி இ. போ. ச. பிராந்திய அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை, சங்கானைப் பகுதி காரியாதிகாரி திரு. என். மாணிக்கநராசா, தபால் பகுதி சுப்பிரிண்டன்ட் திரு. எஸ். தர்மலிங்கம், செனட்டர் நடராசா ஆகியோர் உட்பட இன்னும் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திரு. ரி. முருகேசம்பிள்ளை தலைமையில் செனட்டர் நடராசா, திரு. எஸ். வேலுப்பிள்ளை ஆகியோரைக் கொண்ட குழு இ. போ. ச. தலைவரைச் சந்தித்து 40 புதிய பஸ்கள் இங்கு சேவைக்குத் தருமாறு கோருவதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

சுமார் 75-க்கு மேற்பட்ட பொதுமக்களினதும் பஸ்பிரயாணிகள் சங்கங்களினதும் புகார்கள் இங்கு பரிசீலனை செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் பஸ் நிலை

[8-ம் பக்கம் பார்க்க]

# ‘ஆலயப்பிரவேசத்தினால் மட்டும் தீண்டாமை ஒழிந்துவிடாது’

## மறுமலர்ச்சி மகாநாட்டில் உரை

— நமது நிருபர் எஸ். ஆர். ஞானசுந்தரம் —

அளவெட்டி, புதன் “ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக சட்டங்கள் பல ஆக்கினாலும், பலாத்காரங்களைப் பாவித்தாலும் நீதியே உருவான ஆலயங்களில் சட்டங்களும், பலாத்காரங்களும் நிலைக்காது. நீதி, நியதி ஆகியவைகளை நிலைநிறுத்துவதுதான் தர்மம். இத்தர்மத்துக்கு இடையூறு ஏற்படுமானால் எச்சக்தியும் நிலைக்காது. இதைநிலைநிறுத்தியதுதான் சைவத்தின் வரலாறு. ஆலயங்களைத்திறந்துவிடுவதால் மாத்திரம் தீண்டாமை ஒழிந்துவிடமாட்டாது. தீண்டாமையை ஒழிப்பதற்கு நாம் ஒன்றுபட்டு உழைத்தோமானால் காலரீதியில் சுமுகமான சூழ்நிலை உருவாகும்.”

இவ்வாறு அகில இலங்கை சைவ அனுட்டான சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் இன்று நடைபெற்ற சைவ சமய மறுமலர்ச்சி மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

அகிலஇலங்கை சைவாலய தர்மகர்த்தாக்கள் சபை, அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்தசபை. அகில இலங்கை சைவ அனுஷ்டான சபை ஆகிய சபைகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மகாநாட்டில் அகில இலங்கை இந்து மாமன்றப் பிரதிநிதிகளும், பல ஆலய தர்மகர்த்தாக்களும், அர்ச்சகர்களும் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை இந்து மாமன்ற பிரதிநிதி திரு. மு. வைரமுத்து பேசுகையில், “சைவத்துக்கும், தமிழுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தான இந்நேரத்தில் நாம் இதைக் காப்பாற்றுவதற்காக பரந்த நோக்கத்துடன் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். பழமையான முறைகளை இன்னும் கடைப்பிடித்தோமானால் சைவம் அருகிவரும் நிலை உருவாகும். எமது மத்தியில் வாழும் சைவர்களில் சிலர் வேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## கல்வி

இசைவகுப்பு:
எக்கோடியன்—கிட்டார், மிருதங்கம், மெண்டோலின் முதலிய வாத்தியபயிற்சி அளிக்கப்பெறும். நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1602

பெண்கள் தையலில் பயிற்சி பெறவும் தராதரப் பத்திரம் பெறவும், நவீன விஞ்ஞான முறையில்தையல் கற்பிக்கப்படுகின்றது. மூன்று வகையான நேரங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. [i] மு. ப. 9 — 12 வரை [ii] பி. ப. 2-00 — 5-00 வரை [iii] போயாவும் போயா முன் தினமும் மு. ப. 9-00 — பி. ப. 5-00 வரை. மாதக்கட்டணம் ரூ. 7-50ச. மட்டுமே. விண்ணப்பியுங்கள், அல்லது நேரில் வாருங்கள். கலா தையல் பயிற்சிச் சாலை (சிதா சோடா கொம்பனி அருகே) 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1796

## கல்வி

வகுப்புகள்
உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரிச்சுற்றுடலிலுள்ள பெண் பிள்ளைகளுக்கு தமிழ், புவியியல், பொருளியல், சரித்திரம் ஆகிய பாடங்கள் பட்டதாரி ஆசிரியையால் பிரத்தியேகமாக கற்றுத்தரப்படும். விபரங்களுக்கு விளம்பர இல. 1951 மேற்பார்த்து ஈழநாடு யாழ்ப்பாணம். 1951

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m.
Jane Fonda, Jason Robards, Deanones
in
Any Wednesday

## விற்பனைக்கு

காணி:
பண்டத்தரிப்பு பத்திமா மாதா கோவிலுக்கருகாமையில் பலவிதமான பயிர்களும் உண்டாக்கப்பட்டிருக்கும் 'நெடுங்கண்ணி' என்னும் காணி 100 பரப்பு- உரிமையாளர் - பயஸ் பிரான்சிஸ்பிள்ளை, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 1799

அதிவேகமாய் ஓடக்கூடிய இன்சின் உடன் உள்ள லோஞ்சியும் வேறு இன்ஜின்களும் விற்பனைக்கு உண்டு. கீழ்காணும் விலாசங்களுக்கு தொடர்பு கொள்ளவும். கா. க. சிவலிங்கம், 170, சுங்கா வீதி, திருக்கோணமலை. — பாலாவோடை, காரைநகர். 1797

17-3-68 ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30 மணியளவில், வலிகாமம் வடக்குப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தெல்லிப்பழை மொத்தநிலையத்தில் ஏராளமான வெற்றுச் சாக்குகள், கழிவு சீனி, வேறு பொருள்கள், லொறி ரையர், ரியூப் முதலியன விற்கப்பப்படும். இங்ஙனம் கூட்டுறவு சேவையிலுள்ள க. இராமச்சந்திரன், நிர்வாகக் காரியதரிசி. 1601

## வைத்தியம்

வாதம், தொய்வு, கெற்ப ரோகம், குழந்தை வியாதிகள், புண், கட்டு, பிளவை மற்றும் சகல சர்ம வியாதிகட்கும் பூரண சுகம் பெற டாக்டர் செல்வி சிவா வேலாயுதம் அவர்களை 67, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் சந்தியுங்கள். 1790

## தேவை

ரான்ஸிஸ்டர்:
பாவித்த நாசனல் ரான்ஸிஸ்டர் போட்டபிள் ரேடியோ தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். ஆ. சண்முகநாதன், 160, கண்டி வீதி, அரியாலை. 1604

விற்பனையாளர்:
எமது தயாரிப்புகளையும் ஏஜென்சிப் பொருட்களையும் சைக்கிளில் கொண்டு சென்று விற்பனைசெய்வதற்கு விற்பனையாளர் தேவை. 23-3-68க்கு முன் நற்சான்றிதழ் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். "சிவமுருகன்ஸ்" — புன்னாலைக்கட்டுவன். 1603


இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [ஹட்டன்]
சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

# அச்சுவேலி கொலைவழக்கு

குரும்பசிட்டி, புதன்
அச்சுவேலி கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் இறந்தவரை பிரேதபரிசோதனை செய்த யாழ்ப்பாண மாவட்ட சட்டவைத்திய அதிகாரி டாக்டர்எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளித்தார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்த பின்னர் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் வழக்கு மேல் விசாரணையை இம்மாதம் 25-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். இரண்டாம் எதிரியையும் பரிசோதனை செய்திருந்த சட்ட வைத்திய அதிகாரி பரிசோதனை அறிக்கையையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அச்சுவேலி வறணியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை இராசநாயகம் என்பவரை இவ் வருடம் மாசிமாதம் 27-ம் திகதி இரவு கொலை செய்ததாக இதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை சோமசுந்தரம், செல்லத்துரை விசாகரத்தினம் ஆகிய இருவர்மீது காங்கேசன்துறைப் பொலிசார் இவ் வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

# பௌர்ணமி கலைவிழா

யாழ்ப்பாணம், வியா.
யாழ்ப்பாணம் மாநகர சபை அளிக்கும் பௌர்ணமி நாள் கலைவிழா இன்று மாலை யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெறும். சேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத்துடன் விழா ஆரம்பமாகும். [நி]

81வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

2-வது மாதம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த
மறக்க முடியுமா?

**REGAL** JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
Elvis Presley &
Yvonne Romain
in
DOUBLE TROUBLE

# இந்தியமந்திரி இலங்கைவிஜயம்

புதுடில்லி, மார்ச் 13
இந்தியகைத்தொழில் அபிவிருத்தி மந்திரி திரு. பக்ருதீன் அஹமத் விரைவில்இலங்கைக்குக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கைகைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவின் அழைப்பை ஏற்றே அவர் அங்கு செல்லவிருக்கிறார்

# மூவர் விசாரணைக் குழு நியமனம்

யாழ்ப்பாணம், வியாழன்
நல்லூர் இலங்கைநாயகி அம்மன் கோவில் சம்பந்தமாக இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்னையை விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணைக் குழுவொன்றை அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நியமித்துள்ளார்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். ஈ. புள்ளேநாயகத்தின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ள இவ்விசாரணைக் குழுவில் வழக்கறிஞர் எம். ஆலாலசுந்தரம், முன்னாள் கிராம சபைத்தலைவர் திரு. கே. சபாபதி திரு. கே. முதலியார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (கா. நி)

# தாயைப் பயமுறுத்தினூராம்

வல்வெட்டித்துறை, புதன்
புலோலிமேற்கைச்சேர்ந்த கே. சிறீஸ்கந்தராசா என்னும் இளைஞர் தனது தயாரைப் பயமுறுத்தியதாக பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டவழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியை குற்றவாளியாகக் கண்டு ரூபா 250 பிணையுடன் இரண்டு வருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

# கிராமசேவையாளர் சங்க தலைவருக்கு வரவேற்பு

வல்வெட்டித்துறை, புதன்
அல்வாய் தெற்கு கிராம சேவையாளரான குமாரசாமி இராமச்சந்திரா யாழ் மாவட்ட கிராம சேவையாளர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை பாராட்டுமுகமாக பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோரில் ஒரு வரவேற்புஉபசாரம் நடைபெற்றது.

பருத்தித்துறை காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற உபசாரக் கூட்டத்தில் ஆர். டி. ஓ. திரு. கே. நவரத்தினராசா உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்.

# கேள்வி விளம்பரம்

## வட்டார வேலைகளுக்கு கல்லு, மக்கி, மணல் விநியோகித்தல்

1968-ம் ஆண்டு (பங்குனி) மார்ச் மாதம் 27-ம் திகதி புதன்கிழமை காலை 9-30 மணிவரையும், மேற்படி வேலைக்கு கொந்திராத்துக்காரர்களிடமிருந்து சீல் வைத்தகேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 26-3-68ம் திகதி பி. ப. 3-00 மணிவரையும் ரூபா: 25 ரெண்டர்பணமாகவும் ரூபா: 2 - ரெண்டர்பத்திரப் பணமாகவும் கட்டுவதன் பேரில் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் ஊர்மன்ற அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

கா. சிவகுருநாதன்,
தலைவர்,
வட்டுக்கோட்டை ஊர்மன்றம்.

ஊர்மன்ற அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
11-3-68. 488

# ஏழாலைக் கிராமசபை கேள்வி விளம்பரம்

1 ஒப்பந்த வேலை:- சுழுக்கம்புரை ஒழுங்கை திருத்தி அமைத்தல்.
2. கேள்விப்பத்திரம் கொடுத்தல்:- 25-3-68 பகல் 12 மணிவரை.
3. கேள்விப்பத்திரம் ஏற்றல்:- 26-3-68 மாலை 2மணிவரை.
4. கேள்விப் பிணைப் பணம்:- ரூபா: 50/-.
5. கேள்விப் பத்திரப் பணம்:- ரூபா: 5/-.
6. விபரம் அறிதல்:
1. கிராமசபைஅலுவலகம், ஏழாலை.
2. உ. உ. ஆ. ஆணையாளர் காரியாலயம், யாழ்ப்பாணம்.

க. சிவகுரு J.P.
அக்கிராசனர், கி. ச.
ஏழாலை.

கிராமசபை அலுவலகம்,
ஏழாலை,
9-3-68. 487

# 17-ல் புதிய தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், வியா.
கொக்குவில் கிராமசபைப் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 17-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் அன்று காலை 10 மணிக்கு இத்தெரிவு நடைபெறும்.

இதன் தலைவராகக் கடமையாற்றிய திரு. எஸ். அருளம்பலம் உள்ளூராட்சி அமைச்சரால் அண்மையில் பதவிநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இப்புதிய தலைவர் தெரிவு நடைபெறவிருக்கின்றது. (கா. நி.)

"சூரியன் மார்க்"
வாசனை சந்தன வில்லைகள்
வாசனை சந்தனப் பவுடர்
கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.
இடைக்குமிடம்:
சுந்தரம் பிரதர்ஸ்
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியாவுக்கு எதிராக பலாத்காரம் பிரயோகிப்பது பற்றி ஆலோசனை

## பந்தோபஸ்துசபைக்கூட்டத்துக்கு ஆபிரிக்க நாடுகள் அழைப்பு

நியூயோர்க், மார்ச் 13
ஆபிரிக்கப் பிரஜைகளைத் தூக்கிலிட்டுவரும் ரொடீஷிய அரசாங்கத்துக்கு எதிராகப்பலாத்காரம் பிரயோகிப்பதை ஆராயுமுகமாக ஐ.நா. பந்தோபஸ்து சபையின் அவசர கூட்டமொன்றை, 36 ஆபிரிக்க நாடுகள் அழைத்துள்ளன. அடுத்த வாரத்துக்கிடையில் பந்தோபஸ்துசபை இது பற்றி ஆராயக்கூடுமெனத் தெரியவருகிறது.

பந்தோபஸ்துசபைத் தலைவருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில், ரொடீஷியாவுக்கெதிராக சபை விதித்திருந்த பொருளாதார, மற்றும் தடைகள் யாவும் தோல்வியடைந்து விட்டதாகவும், இனி ரொடீஷியாவுக்கெதிராகப் பலாத்காரம் பிரயோகிக்கும் சாத்தியம் பற்றிச் சபை கூடி ஆராய வேண்டுமெனவும் அந்த 36 ஆபிரிக்க நாடுகளும் கேட்டுக்கொண்டுள்ளன.

## ஆபிரிக்கத் தலைநகர்களில் மாணவர் ஆர்ப்பாட்டம்

இதற்கிடையில், ரொடீஷிய அரசாங்கம் 5 ஆபிரிக்கர்களைத் தூக்கிலிட்டதை எதிர்த்து, பல ஆபிரிக்க நாடுகளிலும் கிளர்ச்சிகள் நடந்துள்ளன.

கீனியாவின் தலைநகரான நைரோபியில், பிரிட்டிஷ் தூதராலயத்துக்கு முன்னால் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார் குறுக்கிட்டே, அவர்களை அங்கிருந்து கலைக்க முடிந்தது. ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைச் சந்திக்கமுன் வந்த உதவித்தூதுவர், கற்களால் தாக்கப்பட்டார்.

கானு தலைநகரான அக்ராவில், மாணவர்கள் ரொடீஷியா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கெதிராகக் கோஷமிட்டுக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

எதியோப்பாத் தலைநகரான அடிஸ் அபாபாவில், பிரிட்டிஷ் தூதரகத்தை மாணவர்கள் கல் எறிந்து தாக்கினர். பொலிசார், கண்ணீர்ப்புகைக் குண்டுகள்வீசியும் தண்ணீர்க் குழாய்களின் மூலம் தண்ணீர் அடித்தும் மாணவர்களைக் கலைத்தனர்.

ரொடீஷியாவிலும், அங்குள்ள ஆபிரிக்க மக்கள் அமைதி இழந்து வருகிறார்கள். ஆட்சியாளர் ஈவிரக்கமின்றி ஆபிரிக்கர்களைத் தூக்கிலிட்டு வருவது, அம்மக்களிடையே எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டுள்ளது.

ஸ்மித் மந்திரி சபையிலும், ஆபிரிக்கர்களைத்தூக்கிலிடும் நடவடிக்கை பற்றிக்கருத்து வேற்றுமை நிலவுவதாகவும் கூறப்பட்டது. அரசாங்கத்தின் தூக்கிலிடும் நடவடிக்கையை ரொடீஷிய நீதிமந்திரியின் தலைமையிலுள்ள தீவிர வலதுசாரிக் குழுவொன்று ஆதரித்து வருகிறதாகவும் சொல்லப்படுகிறது.

## நச்சுணவு அருந்தி 60பேர் மரணம்

ஜக்கார்த்தா, மார்ச் 13
மேற்கு ஜாவா மாவட்டமான சுமதாங்கிங், நஞ்சு பொருந்திய உணவு அருந்தியதின் விளைவாக 60 பேர் மாண்டனர்.

மற்றும் 500 பேரில், நச்சுணவு அருந்திய அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

## செக். தொழிற் சங்க தலைவர் ராஜினுமா

பிராக், மார்ச் 13
செக்கோஸ்லாவாக்கிய தொழிற் சங்கங்களின் மத்திய கவுன்ஸில் தலைவர், தமது பதவியை ராஜினுமாச் செய்துவிளசர்.

தொழிலாளர்களின் நலன்கள் சம்பந்தமாக அவர் போதிய அக்கறை காட்டவில்லை என அவர் மீதுமுன்னதாகப் புகார் செய்யப்பட்டிருந்தது.

தமது கடமைகளைச் சரிவரச் செய்யத் தாம் தவறிவிட்டதாக அவர் ஏற்றுக்கொண்டு தமது பதவியிலிருந்து ராஜினுமாச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## வியட்னும் போர் பற்றி டீன் ரஸ்க் சாட்சியம்

### அமெரிக்க செனேட் வெளிவிவகார கமிட்டி முன்னிலையில்

வாஷிங்டன், மார்ச் 13
அமெரிக்க செனட் வெளிவிவகாரக் கமிட்டியிலுள்ள வியட்னும் போர் விமர்சகர்கள், காங்கிரஸை முன்னதாகக் கலந்தாலோசிக்காமல் வியட்னுமுக்கு மேலதிக அமெரிக்கத் துருப்புகள் அனுப்பக்கூடாது எனத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் கடந்த 2 தினங்களாக செனட் வெளி விவகாரக் கமிட்டி முன்னிலையில் சாட்சியமளித்த அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்ரஸ்க் வியட்னும் போர் சம்பந்தமான இரகசியங்களைப் பகிரங்க விசாரணையில் தாம் அளிக்க முடியாது என மறுத்தார். ஆனால் வேண்டுமென்றால் மூடிய கதவுகளுக்குப் பின்னால் இத்தகைய இரகசியத் தகவல்களைத் தாம் தெரிவிக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

செனட் வெளிவிவகாரக் கமிட்டிக்கு முன்னாலான திரு. டீன் ரஸ்கின் பகிரங்க விசாரணை நேற்றுடன் முடிவடைந்தது. நேற்று அவர் சுமார் 10 மணி நேரம் தொடர்ந்து சாட்சியமளித்தார்.

### ஜோன்சன் வேண்டுகோள்

அவரது சாட்சியம் முடிவடைந்த பின் நேற்றிரவு டெலிவிஷனில் தோன்றிப் பேசுகையில், அமெரிக்க மக்களை 'விரக்தியின் பலியாட்களாக' ஆகிவிட வேண்டாமென்று கேட்டுக்கொண்டார். ஒரு நீதியான காரியத்துக்குப் போராடுவதை மக்கள் கைவிட்டுவிடக்கூடாதெனவும் அவர் கேட்டுக்கொண்டார். வியட்னும் போரில் அமெரிக்கா பங்கு பற்றுவது பற்றியே அவர் இவ்விதம் குறிப்பிட்டார்.

## அமெரிக்க விமானம் கியூபா கடத்தப்பட்டது

புளோரிடா, மார்ச் 13
புளோரிடாவிலிருந்து மூஸாமி நோக்கிச் சென்றுகொண்டிருந்த அமெரிக்க விமானமொன்று பலவந்தமாகக் கியூபாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் 52 பிரயாணிகள் இருந்தனர். விமான சிப்பந்திகள் 7 பேராவர்.

கடந்த ஒரு மாத காலத்தில் கியூபாவுக்குப் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்ட மூன்ருவது விமானம் இதுவாகும்.

## இஸ்ரேல் - ஜோர்தான் புதிய மோதல்கள்

டெலஅவிவ், மார்ச் 13
ஜோர்தான் ஆற்றுக்குக் குறுக்கே, இஸ்ரேல் துருப்புகளுக்கும் ஜோர்தான் துருப்புகளுக்குமிடையே புதிய மோதல்கள் மூன்று ஏற்பட்டுள்ளதாகடெல்அவிவ் செய்திகள் தெரிவித்தன.

இன்று அதிகாலையில், கடைசிமோதல்நின்றுவிட்டதாகவும் அச்செய்திகள்தெரிவித்தன. ஆனால், அரபு வட்டாரங்களிலிருந்து இம்மோதல்கள் பற்றித் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## சூயஸ் பகுதிக்கு நாஸர் விஜயம்

கெயிரோ, மார்ச் 13
ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி நாஸர், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற போருக்குப்பின்பு, நேற்று முதற் தடவையாக சூயஸ் பகுதிக்கு விஜயம் செய்து. அங்குள்ள ஐ. அ. கு. துருப்புகளைப் பார்வையிட்டார்.

நாஸருடன் கூடவே ஐ. அ. கு. போர் மந்திரியும், ராணுவத் தளபதியும் சென்றிருந்தனர்.

சூயஸ்பகுதியிலுள்ளதுருப்புகளுடன் நாஸர் சம்பாஷித்து, கடந்த போரில் ஏற்பட்ட தோல்விக்குக் காரணங்கள், இனி ஒரு போருக்கான ஆயத்தங்கள், அவர்களிடமுள்ள ஆயுதங்கள் முதலிய பல விபரங்களையும் நேரில் கேட்டறிந்து கொண்டார்.

## புதுடில்லி

## ஐ.நா. வர்த்தக மாநாடு

புதுடில்லி, மார்ச் 13
இங்கு நடைபெறும் ஐ.நா வர்த்தக, அபிவிருத்திமாநாட்டில், அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் தமது வருடாந்த உற்பத்தியில் குறைந்தது ஒரு சத வீதமாவது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவியாகஅளிக்கவேண்டுமென கோரப்பட்டுள்ளது.

அத்துடன், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி வரிகளில் அபிவிருத்தியடைந்துள்ள நகடுகள் சலுகைகள் காட்ட வேண்டு மென்றும், அளிக்கும் கடன்களுக்குக் குறைந்தவட்டி வசூலிப்பதுடன் நீண்ட கால வசதி செய்துதரவேண்டுமெனவும் இம்மாநாட்டில் மேலும் கோரப்பட்டுள்ளது.

## உயிருடன் வாழும் ஒரேயொரு மாற்று இருதயக்காரர்

### ஆஸ்பத்திரியிலிருந்து இவ்வாரம் வெளியேறுகிருர்

சிக்காகோ, மார்ச் 13
உலகில் இன்று உயிருடன் வாழும் ஒரேயொரு மாற்று இதயக்காரரான டாக்டர் பிலிப் பிளேய்பேர்க் இவ்வார இறுதியில் அவரது ஆஸ்பத்திரியிலிருந்து அகற்றப்படுவாரென முதலாவது இருதய மாற்றுச் சிகிச்சை நிபுணரான தென்னுபிரிக்க டாக்டர் கிறிஸ்டியன் பேனுட் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பின்னர் கேப் டவுணிலுள்ள குறூட் ஸ்கூர் ஆஸ்பத்திரியில் மூன்ருவது இருதய மாற்றுச் சத்திர

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனுக்காக உளவு பார்த்த இருவர்

### சிறையில் கைது

பீகிங், மார்ச் 13
பிரிட்டனுக்காக உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி இரண்டு பேரைச் சிறை கைது செய்துள்ளது.

இவ்விரண்டு பேரில் ஒருவர் பிரிட்டிஷார், மற்றவர் மேற்கு ஜெர்மனியர். இருவரும், ஒரு பிரிட்டிஷ்தொழில் நிறுவனத்தின் ஊழியராவர்.

இவர்கள் இருவரும் ..... சிறையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்லரசுகளின்

## சமாதான அணு உற்பத்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல்

### ரஷ்யா நிராகரிப்பு

ஜெனீவா, மார்ச் 13
சமாதானத்துக்காக அணு சக்தி உற்பத்தி நடவடிக்கைகளில் அணுஆயுத உற்பத்தி வல்லரசுகள் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற ஆலோசனையை சோவியத் ரஷ்யா நிராகரித்துள்ளது.

வல்லரசுகளின் சமாதான அணுஉற்பத்தி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்ற இந்தஆலோசனைக்கு ஜப்பானும், மேற்குஜெர்மனியும் ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

அணு உற்பத்தி நடவடிக்கைகள் யாவற்றையுமே நிறுத்திவிடும் நிலையை இன்னும் அடையவில்லையென்றும். அந்தநிலையை நோக்கிச்செல்லும் பாதையிலே அணு ஆயுத பரவல்தடை ஒப்பந்தம் ஒரு கட்டமே என்றும் ரஷ்ய பிரதிநிதி விளக்கினுர்.

ஆகவே, இந்தக் கட்டத்தில், சமாதான அணு உற்பத்தி நடவடிக்கைகளை வல்லரசுகள் கைவிடுவது என்பது சாத்தியமில்லையென்றும் அவர் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சுத்தமான வாழ்க்கை நடத்தினால், நமக்குள் இருக்கும் தெய்வத்தை மெதுவாக உணர்வோம். இதயத்திலிருந்து அன்பு ஊற்றெடுத்து விரிந்து பரவும்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 1ம் திகதி [14-3-68]


## பொறுமைக்கு இடமில்லை

பாப்பரசர் வேண்டுகோள் விடுத்தும், பிரிட்டிஷ் மகாராணி கட்டளை பிறப்பித்தும் அவற்றை நிராகரித்துவிட்டு தென்ரொடீஷிய அயன்ஸ்மித் சட்டவிரோத அரசாங்கம் தொடர்ந்து கொலைத் தொழிலைச் செய்து வருகிறது. இதுவரை ஐந்து ஆபிரிக்கர்களை அவர்கள் நாட்டிலேயே தூக்கிலிட்டிருக்கிறது. அயன்ஸ்மித் கும்பல் என்றுணும் பிரிட்டிஷ் அரசாங்கம் இன்னமும் 'சாத்வீகம்' பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறதேயொழிய சரியான நடவடிக்கை எடுக்கவில்லை.

சமீபத்தில் ஏடனில் சுதந்திரப் போராட்டம் நடத்திய ஏடன் சுதேசிகள்மீது படைபலத்தை உபயோகித்த பிரிட்டன், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சொல்லையும் மகாராணியின் உத்தரவையும் உதாசீனப்படுத்திய அயன்ஸ்மித் ஆட்சியாளர்மீது ஏன் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது? தென்ரொடீஷியாவிலுள்ள அயன்ஸ்மித் போன்ற வெள்ளையரின் உறவினர்கள் பிரிட்டிஷாராக இருப்பதால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்தால் அடுத்த தேர்தலில் தங்களுக்கு வீழ்ச்சி ஏற்படும் என வில்சன் அரசாங்கம் கருதலாம். அடுத்த தேர்தலுக்காக ஆங்கிலேயரின் நீதிநியாயத்துக்கு இழுக்கு ஏற்படுத்துவது சரியாகாது. இந்தியாவிலும் இப்போது ஏடனிலும் சுதந்திரப் போராட்டங்களை முறியடிக்க படைபலத்தை உபயோகித்த பிரிட்டிஷ் ஆட்சி, தென்ரொடீஷியாவில் ஆபிரிக்க சுதந்திரப் போராட்ட சுதேசிகளை அயன்ஸ்மித்மூலம் மறைமுகமாக ஒழித்துக்கட்ட முனைந்திருக்கிறதா? பொருளாதாரத் தடை நடவடிக்கை பயனளிக்கவில்லை; சமாதானப் பேச்சு தோல்வியடைந்துவிட்டது; ராஜீய நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. இனியும் பிரிட்டன் 'சாத்வீகம்' பற்றிப்பேசிக் கொண்டிருப்பது ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் அதிருப்தியையும் வெறுப்பையும் தேடிக்கொள்ளவே உதவும். அயன்ஸ்மித் கும்பலுக்கு வில்சன் அரசாங்கம் அஞ்சுவதைவிட ஆபிரிக்க-ஆசிய நாடுகளின் எதிர்ப்பைத் தேடிக்கொள்வது மிக ஆபத்தானது. இனியும் பொறுமைக்கு இடமில்லை. ஆபிரிக்க சுதேசித் தலைவர்களைக் காப்பாற்றுவதுடன் படை நடவடிக்கை எடுத்து அயன்ஸ்மித்தை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி கொலைக் குற்றத்துக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டியதும் பிரிட்டனின் கடமை. இதேசமயம் தென்ரொடீஷியாவின் ஆட்சிப் பொறுப்பை அதன் மக்களிடமே ஒப்படைக்க வேண்டியதும் பிரிட்டனின் பொறுப்பு.

வாரசாரம் — அரசியல் நிருபர்

# மாவட்டசபை மசோதாவும் அரசியல் கட்சிகளும்

மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதா இம்மாதம் 25-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில சமர்ப்பிக்கப்படுமென்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது. ஆளும் கட்சிக் குழுக்கூட்டம் இம்மாதம் 23-ம் திகதி நடைபெறும்போது மாவட்டசபை நகல் மசோதா பரிசீலனைசெய்யப்படும் எனத் தெரிகிறது. தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சித் தலைவர்கள் இந்த நகல் மசோதாவை நன்குபரிசிலனை செய்துதிருத்தங்களும் மாற்றங்களும்செய்து ஏற்றுக்கொண்டிருப்பதால்ஆளும்கட்சிக் குழுக்கூட்டத்தில இந்த மசோதாவில் பெரும் மாறுதல் எதுவும் செய்யப்படுமென எதிர்பார்ப்பதற்கில்லை.

பார்லிமெண்டில் மசோதா சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடைபெறும். அப்போது எதிர்க்கட்சியினர் மசோதாவை கடுமையாக எதிர்த்துப் பேசுவர் என்பதும் இதற்குப் பதிலாக அரசாங்கத் தரப்பிலுள்ளவர்கள், ''நீங்கள் கொடுக்க ஒப்புக்கொண்ட சலுகைகளையும் உரிமைகளையும்விட மிகக் குறைந்தவைகளையே நாங்கள் கொடுத்திருக்கிறோம்'' என்று கூறுவார்களென்பதும் இப்போதே எதிர்பார்க்கலாம். மாவட்டசபை மசோதாவுக்கு ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பிருந்தாலும் மசோதாவை எதிர்த்து வாக்களிக்கும் வாய்ப்புக்கிடைக்காது. எதிர்த்து வாக்களித்தால் அரசாங்கம் ஆட்சி பீடத்திலிருந்து இறங்கநேரிடும். 'ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக' தேசிய அரசாங்கத்தை அமைத்தவர்கள் அதை வீழ்த்தவிரும்புவார்களா?

ஏனவே மாவட்டசபை மசோதா நிறைவேறும் என்று எதிர்பார்க்கலாம்.

மாவட்டசபைகளின் அதிகாரங்கள் என்ன என்பது இன்னும்தெளிவாகத்தெரியவில்லை. மசோதா வெளிவந்தபின்னரே இதுபற்றித் தெரியும். இதை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் மசோதாபற்றிய விபரம்தெரியாமலே பெரும்பாலும் வாதம் புரிகின்றனர். முன்னாள் பிரதமநீதியரசர் திரு. ஹேமபஸநாயகா மாவட்டசபை மசோதாபற்றித் தமது அச்சத்தைத் தெரிவித்து பிரதமருக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு பிரதமர் அளித்த பதிலில் மசோதாவின் இறுதிவடிவம் தெரியாமலே இப்படிக்கருத்துத் தெரிவிப்பது தங்களைப் போன்றவர்களுக்கு அழகல்ல என்றுகூறியிருக்கிறார். இதே சமயம் கொழும்பிலிருந்து வெளிவரும் 'சன்' என்ற ஆங்கிலத் தினசரி கொட்டை எழுத்தில 'மாவட்டசபை'கள்வந்தால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கும் சம உரிமை இருக்குமென்றும் இதனால் 'சிங்களம் மட்டும்' என்ற உத்தியோக மொழிச்சட்டம் மீறப்படுமென்றும் ஒரு விஷமத்தனமான செய்தியை வெளியிட்டிருந்தது. இதற்குப் பிரதமர் மறுப்புத்தெரிவித்திருந்தார். மொழிப் பிரச்னையையும் மாவட்டசபைகளையும் ஒரு பிரச்னையாக்கியும் மீண்டும் வகுப்புத்துவேஷத்தைக் கிளப்ப சிலர் முயல்கின்றனர். இதே சமயம் பார்லிமெண்டறி ஜனநாயகஆட்சி இருக்கும்வரை இப்பிரச்னைகள் தீரமாட்டாதென்றும் வேறு முறையிலான ஆட்சி அமைப்பே இங்கு தேவையென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து கொண்டேகம்யூனிஸ்ட்கட்சி [சீனச்சார்பு] யுடன் தீவிர உறவுகொண்டிருந்த சம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா கூறியிருக்கிறார். மொழிப்பிரச்னையை அரசியல்வாதிகளே பெரிதுபடுத்தி தமக்கு இலாபம் தேடிக்கொள்கிறார்களென்று கூறிக்கொள்ளும் திரு. எஸ். டி. பண்டாரநாயகா, முன்னர் 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தை எதிர்த்து யு.என். பி. யினர் கண்டியாத்திரை சென்றபோது அதைத் தடுத்து நிறுத்திக் குழப்பம் செய்ததன்மூலம் முன்னாள் பிரதமர் திரு. பண்டாரநாயகாவினால் 'இம்புல்கொட வீரயா' என்று பாராட்டப்பட்டவர். திரு.எஸ் டி. பண்டாரநாயகா, மூதியான்சே தென்னக்கூனின் 'சிங்களத்தில் மாத்திரம்' பார்லிமெண்டில் எதிர்க்கட்சினர்பேச வேண்டும் என்ற இயக்கத்தில் கலந்து கொண்ட காரணத்துக்காகவும்எதிர்க்கட்சியினரையேகண்டித்துப் பேசி வருவதற்காகவும் அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற்றியிருக்கிறது பொதுவாக சீனாவை ஆதரித்து வரும் எதிர்க்கட்சிகூட்டு முன்னணியினர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவு கொண்டுள்ள திரு.எஸ்.டி. பண்டாரநாயகாவை கட்சியிலிருந்து வெளியேற்றியதுஏன்?

மாவட்டசபைகள் தமிழரசுக்கட்சிக்கு மட்டும் சொந்தமா? அல்லது தமிழரசுக்கட்சி கேட்ட உரிமைகளுடனும் அதிகாரங்களுடனும் தான் மாவட்ட சபைகள் அமைக்கப்படவிருக்கின்றனவா?

மாவட்டசபைகள் பற்றிய விபரம் தெளிவாகும்வரை சகலரும் பொறுத்திருந்துபார்ப்பதே சிறந்தது.

## இன்றைய பலன்

[14-3-68]

வியாழக்கிழமை

[பங்குனி மீ 1 உ]

திதி- பூரணை இரவு 1-13 மேல் பிரதமை

நட்சத்திரம்- பூரம் மாலை 5-40 மேல் உத்தரம்.

ராகுகாலம்- 1-52—3-22

சுபநேரம் 7-52 — 9-22

இன்று பிறந்தவர்களுக்கு — இவ்வாண்டு எதிலும் தாமத சித்தியே கிடைக்கும். ஆத்திர புத்தியையும், அவசர நடவடிக்கையையும் கட்டுப்படுத்தவும் மேலதிகாரிகளுடன் மோதலைத் தவிர்க்கவும். இல்லத்தில் சிறிது புயல் வீசலாம். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருப்பின் எல்லாம் சரியாகிவிடும் தந்தை வழிமூலம் சில மனச் சோர்வான செய்திகள் கிடைக்கலாம். நாடகத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் பல நல்ல வாய்ப்புக்களை இழந்துவிடநேரிடும்.

மேஷம்- முதியவர் ஆசி, முன்னேற்றமுண்டு.

ரிஷபம்- திருப்தி மனப்பான்மை, திறமைக்கு மதிப்பு.

மிதுனம்- மக்களின் சிறப்பு, மதிப்புடன் வாழ்வு.

கடகம்- தானிய நஷ்டம் தனிவழி நாட்டம்.

சிம்மம்- அடி சறுக்கும், ஆணவத்தை அடக்கு.

கன்னி- தனச் சிறப்பு, தானியவிருத்தி.

துலாம்- தென்றலுப் தியக மாறும், திருடர் பயம்.

விருச்சிகம்- தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்வு.

தனுசு- புத்திரசுகம், புகழும் குவியும்.

மகரம்- குள்ளமதியினரின் குறுககுவழித்தலையீடு.

கும்பம்- தேன் சொட்டும் வாழ்வு, திறமை மிகுதி.

மீனம்- போட்டி மனப்பான்மை, பொல்லாங்கு கேட்டல்.

## மகா கும்பாபிஷேகம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவுருவச்சிலை தாபித்து மகாகும்பாபிஷேகம் நாளை நண்பகல் நடைபெறவிருக்கின்றன. அன்று விசேஷயாக பூஜைகள், பண்ணிசை, பக்திப் பாடல், உபந்நியாசம், தேவார பண்ணிசை, கதாப் பிரசங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

## குருபூஜை

கோப்பாய், புதன்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் வரும் 18-ம் திகதி காரைக்காலம்மையார் குருபூஜைத் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## உள்ளுறுப்புகள் கொழும்புககு

யாழ்ப்பாணம, வியாழன்

ஊர்காவற்றுறை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் எஸ். சுப்பிமணியம் மரணத்திற்கான காரணத்தை தெரிவிக்காததால் சடலத்தின் உள்ளுறுப்புகள் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இப்பெண் இங்குள்ள கடற்கரையில் நேற்று முன்தினம் அதிகாலை இறந்த நிலையில் கிடந்தார். பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

(கா. நி)

## நாட்டிலும் நகரிலும்

உங்களுடைய இவர் சினிமாப் படம் பார்க்கத் தொடங்கியதே ஒரு பெரிய கதை.

1935ம் ஆண்டில் ஒரு நாள் யாழ்ப்பாணம் படமாளிகை ஒன்றில் 'வள்ளி திருமணம்' காட்டப்பட்டது. அக்காலத்தில் பஸ் வண்டிகள் கிடையாது. எப்படியோ ஒருவிதமாக ஐம்பது சதம் எடுத்துக்கொண்டு இவர் 'நடராஜா' வண்டியில் புறப்பட்டுவிட்டார்.

'வள்ளி திருமணம்' அன்று மிகவும் ஜோராக இருந்தது. அடுதது வேறு பல திருமணங்கள் நடந்தன.

நமது தமிழ்ப்பட உற்பத்தியாளர்கள் முன்பு 'வள்ளி திருமணம்', 'சீதா கல்யாணம்', 'திரௌபதி சபதம்', 'சம்பூர்ண அரிச்சந்திரா' இத்தியாதி புராணப் படங்களைத் தயாரித்து வந்தனர்.

அப்படங்களிலே நமது திருத்தெய்வங்களாகிய சிவபெருமானையும், விநாயகரையும், சுப்பிரமணியரையும், பிரம்மன், விஷ்ணு முதலியவர்களையும் அவரவர் கற்பனைப்படி சித்தரித்து வழங்கினார்கள்.

சமயப் படங்கள் வேண்டாம், சமூகப் படங்கள் வேண்டும் என்று பத்திரிகைக்காரர்களும், மற்றவர்களும் கூக்குரல் போட்டார்கள். உடனே சமயப் படங்கள் மாறி சரித்திரப் படங்களும், சமூகப் படங்களும தோன்றின.

இன்று அந்த நிலை மாறியுள்ளது. கதையாசிரியர்கள், பாவம், வேறொன்றும் தெரியாமல் என்ன செய்வதென்று முளிக்கிறார்கள். பழையபடி 'வேதாளம் முருக்கமரத்தில் ஏறிவிட்டது'. 'திருவிளையாடல்' 'சரஸ்வதி சபதம்' 'கந்தன் கருணை' 'திருவருட்செல்வர்' என்றெல்லாம் பழைய புராணக் கதைகள் சினிமாவாகின்றன.

திருநாவுக்கரசர் 80 வயது வரை வாழ்ந்தார் என்று புராணங்கள் கூறும். அப்படிப்பட்ட கிழவர் உழவாரத்துடன் எப்படித் தோன்றுவார் என்று நாம் சிந்திக்கவேண்டியதில்லை. எலும்பும் தோலும் உள்ள ஓர் இடிந்த உருவமல்லவா நமக்கு மனக்கண்ணில் தோன்றும்?

உருளைக்கிழங்கு போல் கொழு கொழுவென்று கொழுத்த திருநாவுக்கரசரை நாம் ஈரேழு உலகத்திலும் காணமுடியாது!

— வழிப்போக்கன்

## கோப்பாயில் கண்ணடித் தொழிற்சாலை

கோப்பாய், புதன்

கோப்பாயில் கண்ணடித் தொழிற்சாலையொன்றினை நிறுவத்தனியார்துறையினர் ஒரு சிலர் முயற்சித்துவருவதாக அறியப்படுகிறது.

இத் தொழிற்சாலை தற்போது கோப்பாய் கிராம சபைக்கு எதிரிலுள்ள காணியில் நிறுவப்படுமெனவும், இதற்கான ஆரம்பவேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும் தெரியவருகிறது.

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் வேலை ஆரம்பிக்கப்படும். இத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருட்கள் யாவும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெறப்படும் எனவும், இத்தொழிற்சாலை இப்பகுதியில் நிறுவப்படுவதன்மூலம் கோப்பாயைச் சேர்ந்த பல வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியில் அலட்சிய போக்கு

## வைத்திய அதிகாரியிடம் புகார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். பெரியாஸ்பத்திரியில் அவசரசிகிச்சைபெறச் செல்வோர் டாக்டர்களின் அக்கறையீனத்தால் தனிப்பட்ட வைத்தியசாலைகளை நாடுகிறார்களாம். நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில் கரணவாய் தெற்கிலிருந்து தடியொன்று கண்ணில் குத்தியதால் கண்ணில் அவசரசிகிச்சை செய்வதற்காக ஆறுவயதுச் சிறுமியொருவரைப் பெற்றோர் அவசரமவசரமாகக் காரில் யாழ். பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனராம். அத்தருணம் ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லாததனால் சிறுமியின் பெற்றோர்கள் சுமார் ஒன்றேகால் மணிநேரம் டாக்டர் வரும்வரை ஆஸ்பத்திரியில் காத்துநின்றனராம். மாலை 3-15 மணிக்கு கண்சிகிச்சை நிலையத்திற்கு வந்துசேர்ந்த டாக்டரொருவர் அவசர சிகிச்சைபெறவேண்டிய சிறுமியைக் கவனியாது முதலில் கண்பார்வை குறைந்தவர்களுக்குக் கண்ணாடிப் பரிசோதனை செய்தபின்னர் சிறுமியின் தந்தை டாக்டரிடம் தமது பிள்ளையைக் கவனிக்கும்படி கூறியபோது வலியால் துடித்துக்கொண்டிருந்த அச்சிறுமியின் கண்ணைப் பார்வையிடாமலும் எவ்வித முதலுதவியும் செய்யாமலும் 'வார்ட்டில்' அனுமதித்துவிட்டுச் செல்லுமாறு கூறிவிட்டு அச்சிறுமியின் தந்தையின் பதிலையும் கவனியாது பத்து நிமிடங்களில் உடனடியாக மாலை 3-25க்கு வெளியே புறப்பட்டுவிட்டார்.

தமது பிள்ளையின் கண் வருத்தத்தை அரசாங்க ஆஸ்பத்திரியில் நன்றாகக் கவனித்து அதற்கேற்ற சிகிச்சைகள் செய்வார்கள் என்றே 16 மைல் தூரத்திலிருந்து நம்பிவந்த அத்தந்தை தமது பிள்ளையை 'வாரட்டில்' விட்டு அனாதையாக்க விரும்பாது யாழ்ப்பாணத்திலுள்ள தனிப்பட்ட டாக்டர் ஒருவரிடம் தமது மகளின் கண்ணுக்குச் சிகிச்சைக்காகச் சென்றார். இதுசம்பந்தமாகப்பெற்றோர்கள் யாழ். ஆஸ்பத்திரிவைத்திய அதிகாரிக்கு புகார் செய்துள்ளனர்.

(உடு. நி

---

### துப்பாக்கி சூட்டு சம்பவம்

#### ஒருவர் ஆஸ்பத்திரியில்

குரும்பசிட்டி, புதன்

பருத்தித்துறை சந்தைப் பகுதியில் வியாபார நிலையம் வைத்திருக்கின்றவர்கள் எனக் கூறப்படும் இருவர்த்தகர்களுக்கிடையே நிலவிவந்த பகைமை மனஸ்தாபம் இறுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முடிந்துள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள புகாரில் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் கைத்துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலத்த காயமடைந்துள்ள செலைத்துரை பரமசோதி என்பவர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கி சூடு சம்பந்தமாகப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் பீ. வீரபாகு என்ற நபரைத் தேடி வருகின்றனர்.

பருத்தித்துறைப் பொலிசார் இச்சம்பவம் குறித்து மேலும் புலன் விசாரணை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

---

### கோப்பாய் வட்டார போட்டி

குரும்பசிட்டி, புதன்

கோப்பாய் வட்டார தமிழ்ப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் போட்டிகள் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இம் மாதம் 22ந் திகதி நடைபெறவிருக்கின்றது. இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வட்டார வித்தியாதிகாரி திரு. எஸ். சண்முகநாதன் கலந்துகொள்வார். இதற்கு முன்னர் இம் மாதம் 18ம், 19ம், 20ம் திகதிகளில் அச்சுவேலி சென். திரேசா கல்லூரி உரும்பராய் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி போன்ற இடங்களில் தெரிவுப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

---

# வடபகுதியில் முதலாவது விவசாயப்படை முகாம்

## அடுத்த மாதத்திலிருந்து இயங்கும்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியில் உள்ளவிசுவமடு குடியேற்றத் திட்டப் பகுதியில் முதன் முறையாக விசாயப்படை முகாம் அமைக்கப்படஇருக்கிறது. வடபகுதியில் முதன் முறையாக அமைய இருக்கும் இவ் விவசாயப்படை முகாமில் சென்றவருடம் ஏப்ரல் மாதத்தில் வலி—வடக்குக் காரியாதிகாரிகாரியாலயத்தில் நடைபெற்ற நேர் முகப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 345 மாணவ விவசாயிகள் பங்கு கொள்வார்கள்.

இம்மாதம் 14-ந் திகதி அமைய இருக்கும்இவ் விவசாய முகாம் வட பகுதியில் முதலாவது முகாம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ. நி)

---

# தாலிக்கொடி திருட்டுவழக்கு: எதிரிக்கு 9 மாத கடூழியம்

குரும்பசிட்டி. புதன்

தாலிக்கொடி திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக கண்டு மல்லாகம் நீதிபதி திரு. எம் சண்முகலிங்கம் 9 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில் அச்சுவேலி சுதிரிப்பாயைச் சேர்ந்த எஸ் முத்துலிங்கம் என்பவர் கடந்த [illegible] சென்ற மாதம் 25-ம் திகதி மயிலிட்டி வாசியான திருமதி இராசேஸ்வரி மார்க்கண்டு என்பவரின் சுமார் 650 ரூபா பெறுமதியான தாலிக்கொடியைத் திருடியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

காங்கேசன்துறைப்பொலிசாருக்கு உதவியாக வழக்காடினர் ஆர். [illegible] தினம் வழக்கை [illegible] னார்.

---

ஆசிரியருக்கு கடிதங்கள்

### ஊழல் ஒழியுமா?

''ஈழநாட்டில்'' உதவியிலும் ஊழலா?'' என்னும் தலையங்கத்தை வாசித்து, அதில் பொருந்தியிருக்கும் கருத்துக்களை ஊன்றிக் கவனித்தேன்.

இன்றைய மிக முக்கியமான பிரச்னை உணவுப்பஞ்சம். அப்பஞ்சத்தை நீக்குவதற்கு, அரசாங்கம் தன்னால் இயன்ற பிரயத்தனங்கள் எல்லாமெடுக்கிறதாகத் தினசரிப் பத்திரிகைகளில் வாசிக்கிறோம். இந்த உணவுப் பஞ்சத்தில் நாம் கவலை காட்டுமுன், வேறொரு விலை மதிக்கமுடியாத பண்டத்தின் பஞ்சத்தை நீக்குவதற்குத் திரிகரண சுத்தியோடும் நாமும் நமது அரசாங்கமும் கடினமான நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அது என்ன? அது தான் ''நேர்மைப்பஞ்சம்'' நேர்மையென்றநிறைந்த செல்வத்தைக் குன்றிப் போகவிட்டு விழலுக்கு நாமிறைக்கிறோம். நாடு செழிக்கவேண்டுமென்றால், இலேசான வழியை ஒரு மாணிக்கம் போன்ற குறளில் வள்ளுவர் வகுக்கிறார்.

''இயல்புளிக்கோலோச்சும் மன்னவன் நாட்ட பெயலும் விளையுளும் தொக்கும்'' இந்த வேதமொழியை யாம் கையாண்டு நடைமுறையில் காட்டினால், உணவுப்பஞ்சம், பஞ்சுபோல் பறந்துவிடுமென்பதற்கு ஓரையமுமில்லை.

இன்றைய சமுதாயத்தில் நேர்மையீனம் மிகவும் வலுவடைந்து இருக்கிறது. அதைப்போக்குவது ஒரு பிரமாண்டமான வேலை. இருந்தாலும் நிலைமை மோசமடையுமுன்நேர்மையைவளர்ப்பதற்கு ஒரு தேசிய இயக்கம் விரைவில் தொடங்க வேண்டும்.

த. பகவதாஸ்

அரசடிவீதி,

யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

### யாருக்கு சேவை

அரசாங்க இலாகாக்களில் கடமையாற்று மதிகாரிகள் பொது மக்களுக்காகசேவை செய்கிறார்களா அல்லது நிர்வாக ஊழல்களை மூடி மறைக்கிறார்களாஎன ஐயுறவேண்டிய நிலையை ஏற்படுத்தினார் ஓர் அதிகாரி. அரசாங்கத்தால் உபஉணவு உற்பத்திப் பெருக்கத்துக்கெனவிவசாயிகளுக்குக்கொடுக்குங்கடன், விவசாய விஸ்தரிப்பு ஓவசியர் சிபார்சில் தவறாக கொடுக்கப்பட்டுஉளதை விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறுவிவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஒருவரிடம் முறையிட்ட போது இவ்வதிகாரி இது விடயத்தை அலட்சியம் செய்தது மட்டுமன்றி முறைப்பாடு செய்யச் சென்றவரை தகாத முறையில் பேசவுமுற்பட்டுவிட்டார் இவர் அதிகாரியா? சர்வதிகாரியா? என்றவினாவைகேட்கவேண்டியிருக்கின்றது.

அரசாங்கத்திற்கு நம்பிக்கையாகவும், பொதுமக்களுக்கு உதவியாகவும் கடமை புரிய வேண்டிய அரசாங்க ஊழியர்கள் தங்கள் நிர்வாகத்தில் உள்ள குற்றச்சாட்டை மூடி மெழுகுவதற்காக முறைப்பாடுகள் செய்

(8-ம் பக்கம் பார்க்க)

---

### 'தரமான நாடகங்கள் மேடையேறுகின்றன'

சுழிபுரம், புதன்

''தமிழ் நாடகங்கள் தரமற்றனவென்றும், அவற்றின் வளர்ச்சி குன்றியுள்ளதென்றும் கருத்துத் தெரிவித்து வருவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் நாடகங்கள் இன்று முன்னர் என்றுமில்லா வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. [illegible] மேடையேறி வருகின்றன'' என்று வட இலங்கை கிராமியக் கலைக் கழகத் தலைவர் திரு. நாவேந்தன் நேற்று மாலை நடைபெற்ற கழகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கே. எஸ். ஆனந்தன், க. யோ. ஆசிநர்தர் ஆகியோரும் பேசினர்.

---

# 'அரசாங்கநடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளியுங்கள்'

— உடுவில் எம். பி.

அளவெட்டி, புதன்

''நாட்டின் சமுதாய வளர்ச்சிக்கு இரு கண்களைப் போல் திகழ்வன சனசமூக நிலையங்களும், கிராமமுன்னேற்றச்சங்கங்களுமாகும். மனிதனுக்கு கண்கள் எப்படி அத்தியாவசியமாக இருக்கிறதோ அதேபோல் சமுதாயவளர்ச்சிக்கு இவைகள் இன்றியமையாத சாதனங்களாகத் திகழ்கின்றன. மனிதன் கண்ணைக் காப்பது போல் மக்கள் இவைகளை காப்பாற்றவேண்டும். இந் நிலையங்களை வளர்த்தால் கிராமமக்களின் கலை, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியன வளரும் என்பதில் ஐயமில்லை. பொருளாதாரத் துறையில் நாம் தற்போது கஷ்டமான நிலையில் இருக்கின்றோம். இக் கஷ்டத்தைப் போக்கவும், நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுநெருக்கடியைத் தீர்க்கவும் அரசாங்கம் எடுக்கும், நடவடிக்கைகளுக்கு சனசமூகநிலையங்களினதும் கிராமமுன்னேற்றச்சங்கங்களினதும் ஒத்துழைப்பும் தேவை''.

இவ்வாறு அளவெட்டி மேற்கு சனசமூகநிலைய 2-வது ஆண்டு வருடாந்த விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சனசமூகநிலைய முன்றலில் பண்டிதர் திரு. க. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மல்லாகம் கிராமசபை உறுப்பினர் திரு. வை. செல்லையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

வலி—வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் பேசுகையில் ''நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைப் போக்க விவசாயிகளாகிய உங்களுடைய ஒத்துழைப்பு தேவை. குறுகிய நிலம் இருந்தாலும் மற்றும் நாடுகளைப் போல நீங்களும் முயற்சி எடுத்து உணவுப் பொருள்களை நவீனமுறையில் பயிரிட்டு நம் நாடு தன்நிறைவு அடைய உதவ வேண்டும் என்றார்.

பண்டிதர் நாகலிங்கம், திரு. செ. மயில்வாகனம், திரு. அ. சிவானந்தன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

நிலையக்காரியதரிசி திரு. சி. பரமேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

---

# எஸ். டி. பண்டாரநாயக்காவை சுதந்திரக்கட்சி நீக்கியது

கொழும்பு, புதன்

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 'கல்தா' கொடுக்கப்பட்டது. சுதந்திரக்கட்சிக்குள்ளிருந்து கொண்டு பெருத்த 'தலையிடி'யைக் கொடுத்துக் கொண்டிருந்த இவரை கட்சியிலிருந்து விலக்கிவிட்டதாகத் தலைமைப்பீடம் அறிவித்தது.

பீக்கிங்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருங்கிய தொடர்புகொண்டு, அக்கட்சியின் மேடைகளில் சொற்பொழிவாற்றியும் வந்தபோதெல்லாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமைப்பீடம் இவரைக் கண்டித்தே வந்தது. அதனையும் மீறி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நடந்துகொண்டார்.

இப்போதுநீக்கவரெட்டிய எம். பி. திரு முதியான்சே தென்னக்கோனின் சிங்களம் மட்டும் இயக்கத்தில் தொடர்பு வைத்துக்கொண்டதைத்தொடர்ந்து கட்சியின் தலைமைப்பீடம் இவர்மீது கடும் நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து இவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.

பகிஷ்கரிக்க யோசனை

பார்லிமென்ட் நடவடிக்கைகள் சிங்களத்தில் நடைபெறாவிட்டால் சபை நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பதென எதிர்க்கட்சியிலுள்ள சிங்கள தீவிரவாதிகளான திரு. ஆர். ஜி. சேனநாயக, ரி. பி. தென்னக்கோன் சோமவீரசந்திரகிரி ஆகியவர்கள் முடிவுசெய்திருப்பதாகத் தெரிகிறது.

---

# நிர்வாகத்துறையில் மேலும் சில மாற்றம்?

கொழும்பு, புதன்

அரசாங்க நிர்வாகத்துறையில் சில மாற்றங்கள் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

நிறைசேரி காரியதரிசி திரு. ஜினதாச சமரக்கொடி மேற்கு ஜெர்மன் தூதுவராகவும், பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி சமரசிங்கா திறைசேரி காரியதரிசியாகவும் நியமிக்கப்படுவரெனவும் தெரியவருகிறது.

தற்போது ஐ. நா. சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக கடமையாற்றும் திரு. ஷேர்லிஅமரசிங்கா பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகவும் மேற்கு ஜெர்மனியில் இலங்கையின் தூதுவராகப் பணியாற்றும் திரு. ஜி. எஸ். பீரிஸ் ஐ. நா. சபையின் இலங்கையின நிரந்தரப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்படலாமென அறியப்படுகிறது.

---

இந்தியாவில்

### நீதிபதி தாக்கப்பட்டார்

புதுடில்லி, மார்ச். 13

இந்திய உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான குரோவர் என்பவர் இன்று ஒருவரால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பிரதமநீதிபதி தீர்ப்பொன்றை வாசிக்கும்போது ஒருஆள் மேசையின்மீது பாய்ந்து கத்தியொன்றை இழுத்தெடுத்தாராம்.

ஆனால் இந்தஆசாமி பின்னால் தள்ளப்பட்டார். அதைத்தொடர்ந்து பிரதம நீதிபதியுடன் அமர்ந்திருந்த இரண்டு நீதிபதிகளில் ஒருவரான குரோவர் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி

## பாடத்திட்டம் (அ)

**வினாக்கள்:**

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:-

[I] உல்லாசப்பிரயாணத்தினால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

[II] இலங்கைப் புகையிரதப்போக்குவரத்திலுள்ள குறைபாடுகள்பற்றியும் அக்குறைபாடுகளைச் சீர்திருத்துவதற்கான வழிவகைகளைப்பற்றியும் விவரித்து, போக்குவரத்து மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதுக.

[III] "ஆய்ந்தோய்ந்து பாராதான் கருமந் தான் சாந்துயரந் தரும்" என்னும் முதுமொழியைப் பொருளாகக்கொண்டு ஒரு சிறுகதை எழுதுக.

[IV] "கட்சி முறையிலிருக்கும் அரசாங்கமே நாட்டின் முன்னேற்றத்திற்குச் சிறந்தது" இதற்குச் சாதக பாதகமான கருத்துக்களை விவரித்து எழுதுக.

[V] மூக்குக் கண்ணாடியின் சுயசரிதையை எழுதுக.

[VI] உமக்கு ஓர் இலட்சம் ரூபா சுவீப் பரிசு கிடைத்தால் நீர் யாது செய்வீர் என்பதை விவரித்து எழுதுக.

2. பின்வரும் உரைப்பகுதியை மூன்றிலொன்றாகச் சுருக்கி எழுதுக:-

சுற்றுப்பிரயாணத்தால் ஏற்படும் நன்மைகள் பல. வெவ்வேறிடங்களுக்குப் பிரயாணம் செய்வதால், ஆங்காங்குள்ள நிலவளம், மக்களியல்பு, இயற்கையின் அழகு, மக்களினம், அவர்களின் நடையுடை பாவனை, மொழி முதலியவற்றை அறியலாம். அதனால் நமது அறிவைப் பெருக்கிக்கொள்ள இடமுண்டு. பிரயாண சாதனமானது நமது நாகரிகத்தை விருத்திசெய்வதற்கும் துணையாய் நிற்கிறது. பேர் ஊர் தெரியாத இடங்களையெல்லாம் நாம் பிரயாணமூலம் அறிந்துகொள்ளலாம். அவ்வவ்விடங்களிலுள்ள ஆலயங்கள், உருவச் சிலைகள், பலவகைச் சித்திரங்கள், சிலாசாசனங்கள் முதலியவற்றைப் பார்த்துப் பேரறிவு பெற இடமுண்டு. இதன் பயனை நன்கு அறிந்ததினாலன்றோ பாகியன் என்ற சீன யாத்திரிகர் பல நாடுகளுக்குச் சென்று தாம்கண்ட உண்மைச் செய்திகளை அறிவித்துள்ளார். அவர் கண்டுஅறிவுறுத்திய உண்மைச்செய்திகளன்றோ தற்போது தேச சரித்திரங்களாய்த் திகழ்கின்றன. சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டதனாலல்லவோ கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

பண்டைக்காலத்தில் நம் முன்னோர் போக்குவரவுச் சாதனமின்றி மிகவும் இடர்ப்பட்டனர். அவர்கள் ஒரூரிலிருந்து மற்றோரூருக்குப் போகவேண்டுமானால், கால்நடையாகவோ, மாட்டு வண்டிகள் மூலமாகவோ சென்றார்கள். அதனால் காலதாமதமும் ஆபத்தும் நேர்ந்தன. போகும் வழிகளில் திருடர் வழிமறித்துக் கொள்ளையிட்டும் வந்தனர். ஆகையால், அவர்கள் பெரும்பாலும் தங்கள் நாட்டைவிட்டு வெறெங்கும் போக்குவரவினை வைத்துக்கொள்ளவில்லை. தற்காலத்திலோ, போக்குவரவுச் சாதனங்களுக்குக் குறைவே இல்லை. நிலத்திலும் செல்லலாம், நீரிலும் செல்லலாம், ஆகாயத்திலும் செல்லலாம். சொற்ப நாளில் குறைந்த பொருட் செலவில் பல ஊர்களைக் கண்டு மகிழலாம். இத்தகைய பல சௌகரியங்கள் இருப்பதனாலேதான், தற்காலத்தில் பலர் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். நாமும் நம்மால் உலகம் முழுவதும் சுற்றிவர இயலாவிட்டாலும், சில முக்கிய இடங்களையாவது சென்று பார்க்கவேண்டும்.

3. பின்வருஞ் செய்யுள்களை வாசித்த பின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

[i] பா லோடளாய நீர் பாலாகு மல்லது
நீராய் நிறந் தெரிந்து தோன்றுதாம்—தேரிற்
சிறியார் சிறுமையும் தோன்று தா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.
அளாய-கலந்த. தேரில்-ஆராயில்.

[ii] நில நலத்தா னந்திய நெல்லே போற் றந் தங்
குல நலத்தா லாகுவர் சான்றோர்— கல
நலத்தைக்
தீ வளி சென்று சிதைத்தாங்கு சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.
நந்திய-வளர்ந்த, கலம்-கப்பல்,
தீவளி-தீக்காற்று.

[iii] மனத்தான் மறுவிலரேனுந் தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தன மும் வேங்கையும் வேமே
யெறி புனந் தீப்பட்டக்கால்.
புனத்து-வனத்தில், வெறி-வாசனை,
மறு-குற்றம்.

[i] இச்செய்யுள்களின் பொருளை எழுதுக.

[ii] நல்வினஞ் சேர்தலால் வரும் நன்மையையும், தீயினத்தைச் சார்தலால் வரும் தீமையையும் புலவர் எந்த உவமைகளால் விளக்கிக்காட்டியுள்ளார்? ூ10

[iii] நில நலத்தானந்திய, நெல்லே போற்றந்தம், சேர்ந்த வினத்தா லிகழப்படுவர், வேமேயெறி புனந் தீப்பட்டக்கால் என்ற சொற்றொடர்களைத் தனிச் சொற்களாகப் பிரித்தெழுதுக.

[iv] பண்புப் பெயர், வினைத் தொகை, [illegible] வேற்றுமை உருபேற்ற பெயர்ச்சொல், வினையெச்சம், உயர்திணைப் பலர்பாற் பெயர் என்பவற்றிற்குச் செய்யுள்களிலிருந்து உதாரணந் தருக.

4. பின்வருவனவற்றின் பொருள் விளங்க அவற்றை வாக்கியங்களிலமைத் தெழுதுக:-
தியாகம், தன்னலம், சிரத்தை, தவறு, மூடக்கொள்கை, சந்தர்ப்பம், கானகம், பரிவாரம், சேய்மை, கற்பனை.

5. பின்வருவனவற்றின் குறிப்புப் பொருள்களை விளக்குக:-
[illegible], பந்தம்பிடித்தல், வயிற்[illegible] கையைக் கடித்தல், முகமுறித்தல்.

[விடைகள் 8ம் பக்கம்]

## பரிதாப மரணம்

சங்கானை, புதன்

தாய்கொடுத்த மருந்துக்கு பத்துமாதக் குழந்தை பலியாகியது.

சங்கானை கிழக்குசிவப்புப் புளியடியைச் சேர்ந்த வயிரமுத்து மகன் ஸ்ரீதரன் [வயது 10 மாதம்] என்ற பாலகன் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் எடுக்கப்பட்ட மருந்துவில்லையை தாயானவள் வாயில்போடவே அது தொண்டையை அடைத்து விக்கல் எடுக்க ஆரம்பித்தது உடனடியாக சங்கானை அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றும் உயிரைக்காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாம்.

டாக்டர் ஸ்ரீகாந்தன் குழந்தையை பரிசோதனை செய்தார். மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா மருந்து வில்லையின் காரணமாக மூச்சுத்திணறி மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பளித்தார்.

## தமிழரசுக்கிளை நிர்வாகிகள்

கோண்டாவில், புதன்

அண்மையில் நடைபெற்ற கோண்டாவில் கிழக்கு தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிக் கிளையின் அங்கத்தினர்ப் பணக் கூட்டத்தில் பின் வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் க. வே. சரவணமுத்து. தலைவர்: க. வேலாயுதம்பிள்ளை, உப-தலைவர்: ஒ. சின்னத்துரை. செயலாளர்: வ. த. நடராஜா, உப-செயலாளர்: சு. தவேந்திரன், தனாதிகாரி ச. சற்குணலிங்கம், உப-தனாதிகாரி பொ. பூபாலசிங்கம் மற்றும் 11 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## யாழ்ப்பாணக்கல்லூரி பரிசளிப்பு விழா

சுழிபுரம், புதன்

யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை பரிசளிப்பு விழா இம்மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கிறது பிரதம விருந்தினராக சபாநாயகர் திரு. சேர்லி எஸ். ஒ. கொரியா கலந்துகொள்வார்.

## உயிருடன்.........

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

சிகிச்சை ஒன்றை அங்குள்ள டாக்டர்கள் செய்வதற்குத் தயாராவார்கள் என்று டாக்டர் பேனாட் கூறினார்.

கறுப்பு மனிவர் ஒருவரின் இருதயத்துடன் 70 நாட்களுக்கும் மேலாக உயிருடன் இருந்துவிட்ட டாக்டர் பிளேஸ்பேர்க் எவ்வளவு காலம் சிவிப்பார் என்பதைத் தப்பால் முன் கூட்டிச் செல்ல முடியாதென டாக்டர் பேனாட் சிக்காகோ பத்திரிகைச் சங்கத்திடம் தெரிவித்தார்.

"அவரது உயிரை நாம் காப்பாற்றிவிட்டோமா என்று என்னால் கூற முடியாது. ஆனால் அதை நீடித்துவிட்டோமென்பதுடன் அவரது வருத்தத்தையும் குறைத்துள்ளோம் என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும்' என்றார் அவர்.

## "விஸ்வமடுக் குளத்திட்டம் சேவையை நினைவூட்டும்"

### அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

"திரு சிவஞானம் யாழ்ப்பாணத்தில் காரியாதிகாரியாகவும், காணி அதிகாரியாகவும் கடமையாற்றிய காலத்தில் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவர் ஒரு தனி மனிதனாக அன்றி ஒரு நடமாடும் இயக்கமாகவே விளங்கினார். இவரது சேவையின் சின்னமாக விஸ்வமடுக் குளம் வாலிபர் குடியேற்றத் திட்டம் என்றும் நினைவூட்டும்".

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா திரு. எஸ். சிவஞானத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட காணி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். சிவஞானம்காணி விஸ்தரிப்பு அமைச்சின் உதவி டைரக்டராகப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டுமுகமாக கச்சேரி ஊழியர்கள் அளித்த பிரியாவிடையின் போது திரு. வேர்ணன் அபயசேகரா மேலும் பேசியதாவது:-

திரு. சிவஞானம் அரசாங்க உத்தியோகஸ்தராக மாத்திரம் இருக்காதுபொது மக்கள் மத்தியில் ஒரு சிறந்த ஆலோசகராகவும், சமய சமூகத் தொண்டனாகவும் விளங்கினார். இவரது திறமையான சேவையை இவர் பிரதேச கலா மன்றத்தின் பொதுச்செயலாளராக இருந்த காலத்தில்என்னால்அறிய முடிந்தது.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. பி. முருகேசம்பிள்ளை, மாவட்ட காணி அதிகாரிகளான திருவாளர்கள் து. உருத்திரமூர்த்தி (மகாகவி), எஸ். ஜெகநாதன், காணி இலாகாவைச் சேர்ந்த திரு. என். நவரத்தினம் ஆகியோரும் திரு. எஸ். சிவஞானத்தின்சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். (கா. நி)

'யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள்

## நன்கொடை பணத்தை ஏன்இன்னமும் பெறவில்லை?'

### விளக்கம் கூறுகிறார் கிராமமுன்னேற்ற அதிகாரி

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாண மாவட்டத்தில் 12காரியாதிகாரிகள் பிரிவில் சுமார் 5 காரியாதிகாரிகள் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் தமது அரசாங்க நன்கொடைப் பணத்தை இன்னமும் பெறவில்லை. இதற்குக் காரணம் அவைகள் இயங்காதிருப்பதும் தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்காதிருப்பதுந்தான் எனத் தெரியவந்துள்ளது.

இத்தகவலை யாழ் மாவட்ட கிராம முன்னேற்ற பிரதம அதிகாரியான திரு. எஸ். பாலசுந்தரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரிக்ந்தோரில்நடைபெற்ற சனசமூக நிலையங்களினதும், மாதர் முன்னேற்றச் சங்கங்களினதும் நிர்வாக உறுப்பினர்களைக் கொண்ட இக் கூட்டத்திற்கு காரியாதிகாரி திரு. க. புள்ளைநாயகம் தலைமை வகித்தார். திரு. எஸ். பாலசுந்தரம் மேலும் பேசியதாவது:-

அரசாங்கத்தின் இன்றைய திட்டத்திற்கமைய சனசமூக நிலையங்களில் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும். விளையாட்டு மைதானங்களைப் போன்று, விவசாயத் தோட்டங்களும் இன்று அவசியமாகி விட்டன. இதற்காக விவசாயக் கழகங்களை அமைக்கவும், மானியம் வழங்கவும் அரசாங்கம் தயாராகவுள்ளது.

சிரமதான இயக்கத்திலேயே இன்று வடபகுதிதான் முன்னணி வகிக்கின்றது. இலங்கைக்கே இது ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது. ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் அரசியல் தலையீடு இல்லாது, சிறந்த சமூகத் தொண்டுகளைச் செய்ய முன்வர வேண்டும்.

கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. நடராஜா உட்பட இன்னும் பலர் பேசினர். சுமார் 75 சனசமூக நிலைய உறுப்பினர்கள் இங்கு சமூகம் கொடுத்திருந்தனர். (கா. நி.)

## "இடமாற்றம் செய்யாதீர்"

நெடுந்தீவு, புதன்

'நெடுந்தீவு கிழக்கு கிராமசேவையாளராக இருக்கும் திரு. ந. கணபதிப்பிள்ளை நேர்மையுடனும், துணிவுடனும், பாரபட்சமின்றியும் தம் கடமையைச் செய்து வருவதால் இவரைத் திடீர் என இடமாற்றம் செய்வது எம் கிராமத்துக்கு பெரும் நஷ்டமாகும். ஆகையால் அவரை இடமாற்றம் செய்ய வேண்டாம்' என்று கோரும் தீர்மானங்களை நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு மத்தி இரு பகுதி கிராம முன்னேற்றச் சங்கங்களும் நிறைவேற்றியுள்ளன. இத் தீர்மானங்கள் வடபகுதி அரசாங்க அதிபருக்கும், உள்நாட்டு மந்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## சைப்பிரஸிலுள்ள ஐ. நா. படை

### காலகெடு நீடிக்க யூதாண்ட் கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 13.

ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட், சைப்பிரஸில் நிறுவப்பட்டுள்ள ஐ. நா பாதுகாப்புப்படை, இன்னும் 3 மாதங்களுக்கு அங்கு நீடிக்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளார்.

சைப்பிரஸிலுள்ள ஐ. நா. பாதுகாப்புப்படையின் காலக்கெடு இம்மாதம் 26ந் திகதியுடன் முடிவுற இருக்கிறது.

கிரேக்க சைப்பிரியருக்கும், துருக்கிய சைப்பிரியருக்குமிடையே ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து சைப்பிரஸில் ஐ. நா.படை நிறுவப்பட்டது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட்

# 8 விக்கெட்டுகளால் ஹாட்லி வெற்றி

குரும்பசிட்டி, புதன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியும் கலந்துகொண்ட சிநேகபூர்வமான முதற்பிரிவு கிரிக்கெட் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி 8 மேலதிக விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இரு தினங்களிலும் இவ்வாட்டம் நடைபெற்றது.

ஸ்கந்தவரோதயா தனது முதல் இன்னிங்ஸில் திறமையாக விளையாடி சுமார் 2 மணித்தியாலங்களில் 162 ஓட்டங்களை எடுத்து சகல விக்கட்டுகளையும் இழந்து பின்னர் ஹாட்லி வீரர்கள் துடுப்பெடுத்தாடி எல்லா விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 120 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். தொடர்ந்து விளையாடிய ஸ்கந்தா வீரர்கள் எதிர்பாராத வகையில்' ஒருசிலமணி நேரத்திற்குள் வெகு விரைவாக எல்லா விக்கட்டுகளையும் இழந்து 60 ஓட்டங்களைமட்டும் பெற்றுக்கொண்டனர். ஹாட்லிக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 112 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். இவ்வேளையில் இவர்கள் 2 விக்கெட்டுகளை நஷ்டமடைந்திருந்தனர்.

## 'வெளியார் தலையீடு வேண்டாம்'

காங்கேசன்துறை,புதன் 1850-ம் ஆண்டு தொட்டு தொண்டமனாறு தொடக்கம் கோவளம் வரையும் தொழில் வசய்துவந்த மயிலிட்டி மீனவர்கள் தொடர்ந்து தொழில் செய்வதற்கு வெளியார் தலையீடு இருக்கக்கூடாது.

காங்கேசன்துறைப் பட்டினசபை உபதலைவர் திரு. சு. வே. சீனிவாசகம்தலைமையில் கூடிய விசேஷ கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கும், மீன்பிடி தனிநபர் கமிஷனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# சீனு அரிசிக்கப்பல் நாளை யாழ். வந்துசேரும்

காங்கேசன் துறை வியா. இவ்வருட பருவகாலத்திற்கு யாழ்ப்பாணத்துறைமுகத்திற்கு வரும் கடைசிக் கப்பல் நாளை வந்துசேரும்.

சீனுவிலிருந்து 6,000 தொன் நிறையுள்ள 60,000 மூடைகளைக்கொண்ட இந்த அரிசிக் கப்பல் நாளை யாழ்ப்பாணத்துறைமுகத்தை வந்தடையும். ''எஸ். எஸ். ஜெப்பிளி'' என்னும்இக் கப்பல் வேலை சுமார் எட்டு நாட்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடபகுதிக்குவரும் அடுத்த கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும். நாளை யாழ்ப்பாணத்திற்கு வரும்அரிசிக் கப்பல் ஆறுவது உணவுக்கப்பலாகும்.

## தீர்த்த மண்டபம்

வல்வெட்டித்துறை, புதன் வல்வை ஊறணி கடற்கரையில் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் புதிதாக தீர்த்த மண்டபம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான வேலைகள் இப்போ நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம் மண்டபம் அமைக்கும் வேலையை வல்வை வாலிபர்கள் சிரமதானமூலம்செய்து முடிப்பதற்கு முன்வந்துள்ளனர்.

## வெற்றி தோல்வியில்லை

குரும்பசிட்டி,புதன் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் இரு தினங்களிலும் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப் போட்டி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரியினர் எல்லா விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 226 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸில் பெற்றனர்.

முதல் இன்னிங்ஸில் மகாஜனா துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 134 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து இந்துக் கல்லூரியினர் விளையாடிய போது 8 விக்கெட்டுகள் நஷ்டமிழந்த நிலையில் 176 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தி மகாஜனா வீரர்கள் விளையாட சந்தர்ப்பம் வழங்கினர்.

பின்னர் மகாஜனா தனது இரண்டாம் இன்னிங்ஸில் 197 ஓட்டங்களைப் பெற்று நேரம் போதாமையால் ஆட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. இந் நிலையில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்திற்குள்ளாகின.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### வியாழன் 14-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 முஸ்லிம்நற்சிந்தனை, 6-45 ஆ இப்பாடல்கள், 7-25 இன்க்குறிப்பு, 7-30 குரல் வகை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைவகுப்பு, 6-30 பேச்சு, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவேகச்சக்கரம் — நடத்துபவர்: விவியன் நமசிவாயம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 செய்திச் சுருக்கம், 9-45 நாகசுரம்.





செறிந்த சுவை, சிறந்த கலவை,
நிறைந்த புகை பிடி இன்பம்...
இவை தரும்
திருப்தியின் சின்னமே
திரீரோஸஸ்
இலங்கையின் அபிமான சிகரெட்

இலங்கையில் தயாரிப்போர்
சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உஷார் நடவடிக்கை

கோப்பாய், செவ்.

இப்பகுதியில் உள்ள தோட்டங்கள் பலவற்றில் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்கு விதைகள் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் இனந் தெரியாதவர்களினால் திருட்டுப் போவது குறித்து பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர். இதுபற்றி கோப்பாய் பொலிசாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து, பொலிசார் தீவிர உஷார் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## இலவச கல்வி

காங்கேசன்துறை, புதன்

தெல்லிப்பழை வாலிபர் ஐக்கியசங்கசனசமூக நிலையத்தின் ஆதரவில் இலவசகல்வி போதிக்கப்பட்டு வருகிறது.

சுமார் 50 க்கு மேற்பட்ட சிறுவர்கள் இவ்வித இலவச போதனைபெற்று வருகின்றனர்.

# தமிழ் மொழி

### விடைகள்

[i] செய்யுள்களின் பொருள்:

பாலுடன் கலந்த நீரானது பால்போலாகுமல்லாமல் நீர்போல நிறம் விளங்கித்தெரியாது. அதுபோல ஆராயுமிடத்து நல்ல பெரியோர் பெருந்தன்மையைச் சேர்ந்து சிறியோருடைய இழிந்த இயல்பும் தோன்றாது.

நிலத்தினது நன்மையால் வளர்ந்த நெல்லைப்போல அவரவருடைய குலத்தின் நன்மையால் பெரியோர் ஆவர். கப்பலின் நன்மையை தீக்காற்றுச் சென்று கெடுத்தாற்போல பெரியோர் தன்மை தீய இனத்தைச் சேரக்கெட்டுவிடும்.

வெட்டப்பட்ட வனம் தீப்பட்டால் வனத்தில் வாசனைவீசுகின்ற சந்தனமரமும் வேங்கை மரமும் வேகும். அதுபோல மனத்தால் குற்றமில்லாதவராயினும் தாங்கள் சேர்ந்த தீய இனத்தால் இகழப்படுவார்கள்.

[ii] பாலைச் சேர்ந்த நீரும் பால் போலாம். அதுபோல பெரியோரைச் சேர்ந்த இழிவுந்தோன்றாது என்று நல்லினஞ் சேர்தலின் நன்மை விளக்கப்பட்டுள்ளது.

தீக்காற்றானது கப்பலைக் கெடுத்தாற்போல நல்லினம் தீயினத்தைச்சேரக் கெடும் என்றும்,

காடுதீப்பட்டால் அதைச் சார்ந்த மரங்கள் வேகும். அதுபோல குற்றமற்றவராயினும் தீய இனத்தைச் சேர்ந்தால் இகழப்படுவார்கள் என்றும் தீய இனத்தைச் சார்தலால்வரும் தீமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

[iii] பிரித்தெழுதல்:-

நில நலத்தானந்திய = நிலம் + நலத்தால் + நந்திய.

நெல்லே போற்றத்தம் = நெல் + ஏ + போல் + தம் + தம்.

சேர்ந்தவினத்தாலிகழப்படுவர் = சேர்ந்த + இனத்தால் + இகழப்படுவர்.

வேமேயெறிபுனந்திப்பட்டக்கால் = வேம் + ஏ + எறி + புனம் + தீ + பட்டக்கால்.

[iv] பண்புப் பெயர்:- பெருமை.

வினைத்தொகை:- கமழ் சந்தனம் [கமழ்கின்ற சந்தனம்]

மூன்றும் வேற்றுமை உருபேற்ற பெயர்:- பாலோடு [ஒடு உருபு].

வினையெச்சம்:- சென்று.

உயர்திணைப்பலர்பாற்பெயர்:- பெரியார்.

4) தியாகம்:- காந்தியடிகள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தம் தாய் நாட்டின் விடுதலைக்காகத் தியாகஞ் செய்தார்.

தன்னலம்:- தன்னலங் கருதாது பிறர் நலங்கருதி உழைத்த பெரியார் நாவலர் அவர்கள்.

சிரத்தை:- எக்காரியத்தையுஞ் சிரத்தையுடன் செய்தால் அதில் வெற்றிகாண்பது நிச்சயம்.

தவறு:- நளன் தான் செய்வது தவறு என்று உணர்ந்தும் விதிவலியால் தமயந்தியை தனியேவிட்டுப் பிரிந்தான்.

மூடக்கொள்கை:- விஞ்ஞான ஆராய்ச்சி மேம்பட்டு விளங்கும் இக்காலத்திலும் சிலர் தமது மூடக் கொள்கைகளைக் கைவிடப் பின்நிற்கின்றனர்.

சந்தர்ப்பம்:- தருமர் எச்சந்தர்ப்பத்திலும் தமது பொறுமையைக் கைவிடவில்லை.

கானகம்:- கானகத்திலே காதலியைக் கைவிட்டுச் சென்றது நீதியோ எனத் தூதுவன் நளனைக் கேட்டான்.

பரிவாரம்:- அரசன் தன் பரிவாரம் புடைசூழ வேட்டை மேற்சென்றான்.

சேய்மை:- பரதன் சேனைகளோடு வருவதைச் சேய்மைக்கண் கண்ட குகன், இராமபிரான்மீது படையெடுத்து வருகின்றான் என எண்ணினான்.

கற்பனை:- சகுனியின் சூழ்ச்சியைக் கேட்ட துரியோதனன் பாண்டவரை வஞ்சனையால் வென்று அரசினைக் கைப்பற்றலாம் என்று கற்பனை செய்தான்.

5. குறிப்புப் பொருளை விளக்குதல்:

| | | |
|---|---|---|
| தலையைத் தடவுதல் | — | வஞ்சித்தல், ஏமாற்றுதல். |
| பந்தம்பிடித்தல் | — | தன்னலங்கருதி ஒருவரைச் சார்ந்தொழுகுதல். |
| வயிற்றைக்கட்டுதல் | — | செலவைச் சுருக்குதல். |
| கையைச் சுடுதல் | — | நட்டமடைதல். |
| முகமுறிதல் | — | வெறுப்படைதல். |

[அடுத்த மாதிரி வினாவிடைகள் 29-3-68-ல் வெளிவரும்]

## யாவரும் சித்தி

புலோலி, புதன்

வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கத்தால் நடாத்தப்படும் 5-ம் வகுப்பு பரீட்சைக்கு 24 மாணவர்கள் தோற்றி ஏ பிரிவில் பதின்மரும் பி பிரிவில் பதினொருவரும் சி பிரிவில மூவருமாக சித்தியடைந்துள்ளனர்.

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தால்நடாத்தப்படும் எட்டாம் வகுப்புப் பரீட்சைக்கு பதின்மர் தோற்றி பதின்மரும் சித்தி பெய்தியுள்ளனர்.

## புதிய நிர்வாகிகள்

அனலைதீவு, புதன்

அனலைதீவு பிரயாணிகள் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

போஷகர்கள் திரு. ஐ. நடராசா [தபால் அதிபர்] திரு. சி. காராளபிள்ளை ஆசிரியர் தலைவர் திரு. ச. க. காசிலிங்கம், உபதலைவர் திரு. ஆ. இரத்தினசபாபதி, பொதுச் செயலாளர், திரு. பெ. துரைராசா [சுகாதார பரிசோதகர்] உபசெயலாளர் திரு. ச. ஐ. நடராசா, தனதிகாரி திரு. செ. சிவநேசன் மற்றும் 7பேர் கொண்ட நிர்வாககுழுவும் தெரிவும் செய்யப்பட்டது.

## யாருக்கு சேவை

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

யப்பட்டவிடயத்தைப்பற்றி எதுவும் விளங்காது முனைப்பாடு செய்யச் சென்றவரை தனிப்பட்டமுறையில் அவமதிப்பாக பேசுவது இவர்களின் கடமையாகயிருந்தால் இவர்களது நிர்வாகம் பொது மக்களுக்காகஇயங்குகின்றது. அரசாங்கத்தின் தட்டங்களைச் செயல்படுத்துகின்றது என்று கூறமுடியுமா? இதைமேல் அதிகாரிகள் கவனிப்பார்களா?

சி. பாலசிங்கம். மண்டைதீவு

## கதம்பவிழா

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் கதம்பவிழா இம்மாதம் 19-ம் திகதி பருத்தித்துறை மெதடிஷ்த மிஷன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கதம்பவிழாவில் வடமராட்சியைச் சேர்ந்த தொண்டமனாறு இந்து ஆங்கிலப் பாடசாலை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி, வட இந்துமகளிர் கல்லூரி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கட்டைவேலி ஞானசாமியார் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகிய 9 பாடசாலைகள் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

## திருமண அழைப்பு

முகூர்த்தம்: பிலவங்க வருடம் பங்குனி மாதம் 2-ந் திகதி (15-3-68) இரவு 12-29மணி தொடக்கம் 1-00 மணிவரை. இடம்: செல்வச்சன்னதி கோவில், தொண்டமானாறு. மணமகன்: சி. சுதிர்காமத்தம்பி, (Radiographer, General Hospital, Colombo), மணமகள்: க. நிர்மலா. நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன்அழைக்கின்றோம். வ. சி. ...னத்துரையும் பாரியாரும், கொத்தியால், வல்வெட்டித்துறை: வே. கந்தசாமித்துரையும் பாரியாரும், ... ...டித்துறை. 1952

# வரிகட்டுவதில்லையெனத் தீர்மானம்

அராலி, புதன்

அராலி தெற்கு, கிழக்கு பயிர்செய்கைக் குழுவின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. கமத்தொழில் பகுதி உத்தியோகத்தரும் கிருஷிகப்பகுதி போதனாசிரியர் திரு. குமாரவேலுவும் சமூகமாயிருந்தனர். 1963,-64, 65-66 ஆண்டுகளுக்குரிய வயல் வரியை பரப்பொன்றிற்கு 13 சதவீதம் அறவிட வேண்டுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தும் விவசாயிகள்பலர் இவ் வரியைக் கட்டவில்லை. 1964-65, 1966-67 ஆண்டுகளில் வேளாண்மை அழிவுற்றமையால் தாம் பெரிய கஷ்டத்துக் குள்ளாயினரென்றும் பயிர்செய்கைக் குழு பயிர்க் காப்புறுதிக்கு எதுவித முயற்சிகள் செய்யவில்லையென்றும் புகார்கள் கூறப்பட்டன.

இக் கூட்டத்தில் 1963-64 ஆண்டிற்குரிய வரியை வசூலிக்க முடியாதென கமத்தொழிற்பகுதி உதவி ஆணையாளருக்கு அறிவிப்பதென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## உடுப்பிட்டியில் மலேரியா

புலோலி, புதன்

உடுப்பிட்டிப்பகுயில் மீண்டும்மலேரியா நோய் பரவுவதாக மலேரியாதடுப்புப் பகுதியினரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

கடந்த இரு நாட்களுக்கு முன்பு துன்னாலை தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்றநபருக்கும், கரவெட்டி மேற்கைச்சேர்ந்த நிக்கலா பிள்ளைக்கும் கற்கோவளம் வாசியான ஜெயக்கொடிக்கும் மலேரியா நோய் இருப்பதாகக் கண்பிடிக்கப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்களாம்.

மீண்டும் இம்மலேரியா நோய் பரவாத வண்ணம் மலேரியா தடுப்பு பகுதியினர் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

## ஆலயப்............

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மதமான புத்த மதத்தில் சேர்வதற்கான இக்கட்டான நிலை உருவாகிவருகிறது. இந்நேரத்தில் ஆலயங்களை பாதுகாக்கும் தர்மகர்த்தாக்களும், அர்ச்சகர்களும் இந்நிலைமையை உணர்ந்துசெயலாற்றவேண்டும்'' என்றார்.

இந்துமாமன்ற யாழ். பிரதேச செயலாளரும், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபருமான திரு. அம்பிகைபாகன் பேசுகையில், சைவத்தைக்காக்கும் எமது குருமார்கள் சைவத்தைக்காப்பாற்ற முடியாது நீதிமன்றங்களுக்குச் செல்வது சமயத்துக்கு இழுக்காகுமென்றார்.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்கோவில் தர்மகர்த்தா திரு. அ. தாமோதரம்பிள்ளை பேசுகையில், சமய விடயங்களில் அரசியல் தலையீடு விரும்பத்தக்கதன்று என்றார்.

திரு. சரவணமுத்து கந்தவனக் கடவை தர்மகர்த்தா திரு. எஸ். யோகேந்திரன், தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோவில் அர்ச்சகர் திரு. ஆறுமுகம் ஐயர், தொண்டர் அருளம்பலம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பேசினார்கள்.

## 40 புதிய பஸ்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிதுக்கும், கோண்டாவிலிலுள்ள பஸ் டிப்போவுக்குமிடையில் உடனடியாக தொலைபேசி வசதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதென்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கு ஒலிபெருக்கிகள் அமைத்துத்தருமாறும் இ. போ. ச. அதிகாரிகளைக் கேட்பதென்றும் இங்கு முடிவுசெய்யப்பட்டது.

[கா. நி.]

## வெளிநாட்டு ......

(1ம் பக்கத்தொடர்ச்சி)

போவதைத் தடுக்கவும் வழிவகுக்கும் வகையில் முற்பணம் கட்டி எடுக்கப்படும் டிக்கட்டுகளுக்கு 20 சதவீதம் வரி அல்லது டிக்கட்டுக்கு ரூபா 500 வீதம் அறவிடலாம் என்று நாணய கட்டுப்பாட்டதிகாரி மந்திரி சபைக்கு ஆலோசனை கூறியுள்ளார். ஆனால் மந்திரிசபை உபகமிட்டி இதுபற்றி முடிவு எதுவும் எடுக்கவில்லை.

## விண்ணப்பிக்கா..

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

வராததால், முன்னர் விவசாயப்படைக்கு விண்ணப்பிக்காதவர்கள்கூட அந்தத் தொகுதி எம். பி. க்கள் சிபார்சு மூலம் விவசாயப்படையில் சேர்ந்து கொள்ளலாமென்று அறியப்படுகிறது.

## கல்வி................

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நமது பிள்ளைகளின்பாடப் புத்தகங்களை, தென்னிலங்கையிலுள்ளவர்கள் தீர்மானிக்கும் நிலைமைமாறினால்தான், மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

தமிழினத்திற்கு 18வருடங்களுக்கு முன் ஆரம்பமான சனிதிசை இன்று முடிவடையும் காலத்திலிருக்கிறது. தான் மந்திரியாயிருந்த காலத்தில் என்னை வந்து பேட்டிகண்ட ஆசிரியர்களும், தமிழ் மாணவர்கள் மட்டுமன்றி மற்ற சமூகத்தவர்களும், விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் படிக்கும்படி கூறினேன். எல்லாப் பாடங்களும், சுயபாஷையில் படிக்க வேண்டும் என்று அன்று கூறியவர்கள், இன்று என் கருத்தை ஏற்று...ளார்கள்.

என்னுடைய அரசியல்வரலாற்றில்மந்திரிகளிடம் போகும்வழக்கம்கிடையாது. அப்படியிருந்தும் ஆசிரியர்கள் பிரச்னை பற்றி கல்வி மந்திரியிடமும் நிரந்தரக்காரியதரிசியிடமும் சென்று விளக்கமாக விஷயங்களை கூறினேன். 3 வருடத்திற்கு முன் அவர்கள் சரி என்று ஏற்றுக்கொண்ட விஷயங்களில் ஒன்றைக் கூட இன்று வரை அமுல் செய்யவில்லை. இதற்கு நான் என்ன செய்ய முடியும்? தமிழினத்தின் கல்வியையும், தமிழ்ப் பாடசாலைகளின் தரத்தையும் குறைப்பதற்கு நாளுக்கு நாள் திட்டமிட்டு வருபவர்களிடம் நாம் நீதி, நியாயத்தை எதிர்பார்க்க முடியுமா?

இடமாற்றம் பற்றி ஒரு திட்டம் தயாரித்து தாருங்கள் அத்திட்டத்தை அமுல் செய்ய முயற்சி எடுக்கின்றேன். தனித்தனியாக ஒவ்வொரு ஆசிரியர்களின் பிரச்னைகளையும்தீர்க்கமுடியாது திட்டம் சரிவர அமுல் செய்யப்படாவிடில் மந்திரியை சந்திக்கதேவையில்லை. பாராளுமன்றத்தில் பேசலாம்.

திருவாளர்கள் எஸ் சிவப்பிரகாசம் சிவசம்பு மற்றும் பலர்பேசினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம்14-ந்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org